குமர்



## நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி சார்பில்

# போதை விழிப்புணர்வு பேரணி

குழித்துறை, ஜூலை.28-
மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி மற்றும் மாவட்ட காவல்துறை சார்பில் போதை விழிப்புணர்வு கருத்தரங்கம், போதை விழிப்புணர்வு பேரணி, மரம் நடும் விழா ஆகிய முப்பெரும் விழா கல்லூரியில் நடைபெற்றது. இந்த விழாவுக்கு கல்லூரி முதல்வர் ஷீலா கிறிஸ்டி தலைமை தாங்கினார். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ஜோஸ்பால் வரவேற்று பேசினார்.

விழாவில் மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி தாளாளர் ஏ.ஜெ. எஸ்.பிரவின் நிகழ்ச்சிகளை தொடங்கிவைத்துபேசினார். மாவட்ட கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு மதியழகன் போதை விழிப்புணர்வு பற்றி பேசினார். மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் எவர்லின் சுபா வாழ்த்தி பேசினார்.

இந்த விழாவில் கல்லூரி வளாகத்தில் 5 மரக்கன்றுகள் நடப்பட்டன. பின்னர் கல்லூரியில் இருந்து மார்த்தாண்டம் பகுதியில் போதை விழிப்புணர்வு பேரணி நடந்தது.

இந்த பேரணியில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் தேசிய மாணவர் படை அலுவலர் கேப்டன் பாய்ட் வெஸ்லி நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சிகளில் கல்லூரி ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள் அஜித்குமார், சுனில் குமார், ஜெயசிங், கிங்ஸ்லி தாமஸ், செல்வகுமார் மற்றும் பலர் பங்கேற்றனர்.